**செய்தி வெளியீடு எண் : 1331** **நாள் : 05.08.2022**

## <u>நான்கு ஆண்டுகளாக வழங்கப்படாமல் இருந்த பழங்குடியினர் சாதிச்சான்றிதழ் ஆணையத்தின் தலையீட்டிற்குப் பிறகு வழங்கப்பட்டது!</u>

பட்டியலிடப்பட்ட பழங்குடி மக்களுக்கு சாதிச் சான்றிதழ் வழங்கப்படுவதில் காலதாமதம் ஏற்படுவதாகவும் அதனால் தங்களுக்குரிய இட ஒதுக்கீட்டை அனுபவிக்க முடியாமல் தங்கள் பிள்ளைகளை பொதுப் பிரிவில் சேர்த்துப் படிக்க வைக்கும் நிலைக்கு தாங்கள் தள்ளப்படுவதாகவும் பழங்குடி மக்கள் தொடர்ந்து போராடி வருகின்றனர்.

இந்நிலையில் தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாநில ஆணையத்தில் 09.03.2022 அன்று திரு. ப. ஜெயக்குமார் என்பவர், தாம் உரிய சான்றிதழ்களுடன் திருவள்ளூர் வருவாய்க் கோட்டாட்சியரிடம் தமது இரு பிள்ளைகளுக்கும் பழங்குடி இனச்சான்று கோரி முறையாக விண்ணப்பித்திருந்தும் நான்காண்டுகளாக சான்றிதழ் வழங்கப்படாமல் இருப்பதாகக் குறிப்பிட்டு, ஆணையம் தலையிட்டு சான்றிதழ் வழங்க ஆணை பிறப்பிக்குமாறு புகார் அளித்திருந்தார்.

மனுதாரர் ப. ஜெயக்குமார், திருவல்லிக்கேணியை பூர்வீகமாகக் கொண்ட 'குருமன்ஸ்' பழங்குடி இனத்தைச் சார்ந்தவர். இவர்கள் 150 ஆண்டுகளாக திருவல்லிக்கேணி ஜாம் பஜார் பகுதியில் சுமார் 220 குடும்பங்களாக வசித்து வருகிறார்கள். 1981 இல் எடுத்த மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, இவரது குடும்பம் 214 ஆவது குடும்பமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் இவரது சாதிச் சான்றிதழ்களுடன் இவரது தந்தை மற்றும் இவருடன் பிறந்தவர்களின் சாதிச் சான்றிதழ் நகல்களையும் இணைத்துத்தான் இவர் தமது பிள்ளைகளுக்கு 'இந்து குருமன்ஸ்' என்று சான்று வழங்குமாறு கோரியிருந்தார்.

பணி நிமித்தமாக மனுதாரர் சில ஆண்டுகள் திருவள்ளூரில் குடியிருக்க நேர்ந்ததாலும், இவருடைய ஆதார் அட்டை திருவள்ளூர் முகவரியில் இருப்பதாலும், 26.07.2018 அன்று திருவள்ளூர் வருவாய் கோட்டாட்சியரிடம் இவர் பழங்குடி இனச்சான்று கோரி மனு அளித்திருந்தார். விண்ணப்பித்து மூன்று ஆண்டுகள் கடந்தும் இவருக்கு இனச்சான்று வழங்கப்படாததால் நேரில் சென்று கேட்டபோது, இவருடைய கோப்பு காணாமல் போய்விட்டதாகத் தெரிவித்தனர். மீண்டும் 28.06.2021 அன்று அதே வருவாய் கோட்டாட்சியரிடம் விண்ணப்பித்தார். அதன் பிறகும் நடவடிக்கை இல்லாததால் 23.08.2021 அன்று இ சேவை மையத்தின் மூலம் விண்ணப்பித்தார். அதன் பிறகு இவருடைய கோரிக்கை மனுவின் மீது விசாரணைகள் நடத்தப்பட்டாலும் சாதிச் சான்றிதழ் மட்டும் வழங்கப்படவில்லை.

எனவே, திருவள்ளூர் மாவட்ட ஆட்சியரின் மக்கள் குறை தீர்ப்பு நாளன்று (15.11.2021) ஆட்சியரிடம் மனு அளித்தார். அதற்குப் பிறகு, அவரது பூர்வீக மாவட்டத்தில்தான் அவர் விண்ணப்பிக்க வேண்டும் என்று கடிதம் மூலம் விளக்கம் தெரிவிக்கப்பட்டு, அவருடைய விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டு விட்டது.

எனவே, நான்காவது முறையாக தென் சென்னை கோட்டாட்சியர் அலுவலகத்தில் இனச்சான்றிதழ் கோரி நேரில் விண்ணப்பம் அளித்தார். ஆனால் ஆன்லைன் மூலம்தான் விண்ணப்பிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டதால், மீண்டும் ஆன்லைன் மூலம் தென்மண்டல வருவாய் கோட்டாட்சியரிடம் விண்ணப்பித்தார். அவ்வாறு விண்ணப்பித்தபோது, அவருடைய ஆதார் முகவரியில் திருவள்ளூர் என்று குறிப்பிடப்பட்டு இருப்பதால் அது மீண்டும் திருவள்ளூர் வருவாய் கோட்டாட்சியரிடமே சென்றது. இதனால் அவர் தென்

சென்னை வருவாய் கோட்டாட்சியரிடம் மீண்டும் நேரில் சென்று மனு அளித்தபோது அவர் அதை வாங்க மறுத்து விட்டார். அதன்பிறகு தனது மனுவை பதிவஞ்சல் மூலம் தென் சென்னை வருவாய் கோட்டாட்சியருக்கு அனுப்பி வைத்தார். இருப்பினும் அவருக்கு முறையாக எந்தப் பதிலும் அளிக்கப்படவில்லை.

அதன்பிறகு இறுதியாக மனுதாரர் தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாநில ஆணையத்தை நாடினார். மனுதாரரை நேரில் விசாரித்த ஆணையம், இரு வருவாய் கோட்டாட்சியரிடமும் விளக்கம் கேட்டு அறிவிக்கை அனுப்பி விரைவில் மனுதாரருக்கு இனச்சான்றிதழ் வழங்குமாறு உத்தரவு பிறப்பித்தது. அதனடிப்படையில் 30.05.2022 அன்று ஒப்புதல் அளிக்கப்பட்டு, 10.06.2022 அன்று மனுதாரரின் இரண்டு பிள்ளைகளுக்கும் (சிறீஜா மற்றும் ஹரீஷ்வர்) திருவள்ளூர் வருவாய் கோட்டாட்சியர் மூலம் பழங்குடி இனச்சான்றிதழ் வழங்கப்பட்டது.

உறுப்பினர் செயலர்
தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும்
பழங்குடியினர் மாநில ஆணையம்

***********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in